தமிழக அரசு பட்ஜெட்

அரசு ஊழியர்கள் மகிழ்ச்சி

'எதிர்பாராத சலுகைகள் கிடைத்து விட்டன'

சென்னை, ஜூலை. 18-

'தமிழக அரசு பட்ஜெட்டுக்கு அரசு ஊழியர்கள் மகிழ்ச்சி தெரிவித்து உள்ளனர். எதிர் பாராத சலுகைகள் கிடைத்து உள்ளன' என்று தெரிவித்து உள்ளனர்.

கூட்டறிக்கை

இது குறித்து தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில தலைவர் அறிவுக்கரசு, துணைத் தலைவர் சுபாஸ் சந்திரபோஸ், அமைப்பு செயலாளர் எம். சுந்தரம், பொருளாளர் கண்ணப்பன் ஆகியோர் கூட்டாக ஒரு அறிக்கை வெளியிட்டு உள்ளனர்.

அதில் அவர்கள் கூறி இருப்பதாவது:-

30 ஆண்டு பணிக்காலம்

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர், தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கு எண்ணற்ற பயன்களையும் எதிர்பாராத சலுகைகளையும் வழங்கியுள்ளார். அதற்காக என்.ஜி.ஓ. யூனியன் சார்பாக மட்டற்ற மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசு அலுவலர் பணிக் காலத்தில் இறந்தால் ஒரு லட்சம் ரூபாயும், அதனைப் போன்றே ஓய்வு பெறும்போது பல்வேறு பயன்களைப் பெற 33 ஆண்டு காலப் பணி நிறைவடைந்திருக்க வேண்டும் என்பதை 30 ஆண்டு காலப் பணிக்காலம் போதும் என்றும் அறிவிக்கப்பட்டு உள்ளது. வாகனக் கடன் உயர்வு, திருமணக் கடன் பெறுவதிலிருந்து இடர்பாடுகள் போக்கப் பட்டுள்ளன.

மேலும் எட்டு மாத கால விடுப்புக்கால முழுச் சம்பளத்தை அனைத்துப் படிகளுடன் சேர்த்து வழங்கவும், தனிப்பட்ட அலுவலுக்காக வழங்கப்படும் விடுப்பின் மூலமாக அதிகபட்சம் 3 மாத முழுச் சம்பளம் கிடைக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

மட்டற்ற மகிழ்ச்சி

ஓய்வுபெற்ற அரசு அலுவலர்களுக்கு 1.4.95 முதல் இரண்டாம் தவணை இடைக்கால நிவாரணம் வழங்கியுள்ளதும் மற்றும் ஓய்வு பெற்ற அரசு அலுவலர் இறந்தாலும்கூட அவர்கள் குடும்பத்திற்கும் ரூ.25 ஆயிரம் வழங்கவுள்ள திட்டமும், மருத்துவப்படி ரூ.50 வழங்கவும், முதல்வர் டாக்டர் கலைஞரின் மேற்கண்ட எண்ணற்ற பயன்களும் எதிர்பாராத சலுகைகளும் லட்சக்கணக்கான அரசு அலுவலர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்துள்ளது.

முதல்வருக்கு எங்கள் இதய மார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

மேற்கண்டவாறு அறிக்கையில் அவர்கள் கூறி உள்ளனர்.

இடைநிலை ஆசிரியர் மன்றம்

தமிழ்நாடு இடைநிலை ஆசிரியர் மன்ற பொதுச் செயலாளர் திட்டக்குடி சண்முகம், பொருளாளர் மாறன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டு உள்ள ஒரு அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

தமிழக முதல்வர் கலைஞர் தன் வரவு செலவு திட்டத்தில் 85 தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கவும், 21 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 99 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 80 உயர் நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்த திட்டமிட்டு இருப்பது, இதுவரை எந்த அரசும் உயர்த்தாத அளவுக்கு உயர்த்தியுள்ளது.

ஆசிரியர்கள், அரசு அலுவலர்களுக்கு குடும்ப பாதுகாப்பு நிதியினை ரூ.60 ஆயிரத்திலிருந்து ரூ ஒரு லட்சமாகவும், மிதிவண்டி முன்பணம் ரூ.1000 என்பதிலிருந்து ரூ.1500 ஆகவும், மோட்டார் சைக்கிள் முன்பணம் ரூ.25 ஆயிரத்திலிருந்து ரூ.35 ஆயிரமாகவும், புதிய கார் வாங்க முன்பணம் ரூ.2 லட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மற்றும் பல்வேறு சலுகைகளை ஆசிரியர்கள் அரசு ஊழியர்களுக்கு வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வரவு செலவு திட்டத்தில் அதிக பள்ளிகளை உயர்த்தியுள்ளதாலும் வரவு செலவுத் திட்டத்தில் மத்திய அரசோ, மாநில அரசுகளோ வழங்காத பல்வேறு புதிய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதாலும் இந்திய துணைக் கண்டத்திலேயே டாக்டர் கலைஞரின் வரவு செலவுத் திட்டம், ஒரு புதிய வரலாற்றைப் படைத்து முதலிடத்தைப் பெற்றுள்ள வரவு செலவு திட்டமாகும்.

மேற்கண்டவாறு அறிக்கையில் அவர்கள் கூறி உள்ளனர்.

அரசு பணியாளர் சங்கம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் கு. பாலசுப்பிரமணியன், துணைத் தலைவர் சித்தையன், பொதுச் செயலாளர் பி.எஸ். சவுந்திர பாண்டியன் ஆகியோர் கூட்டாக ஒரு அறிக்கை வெளியிட்டு உள்ளனர். அதில் அவர்கள் கூறி இருப்பதாவது:

தமிழக முதல்-அமைச்சர் கலைஞரின் நிதி நிலை அறிக்கையை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கம் முழு மனதுடன் வாழ்த்தி வரவேற்கிறது.

ஆட்சிப் பொறுப்பேற்று 2 மாதங்களுக்குள்ளாகவே, அரசுப் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளில் ஆழ்ந்து அக்கறை செலுத்தி, எந்த ஒரு சங்கடத்திலும் கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெறாத சூழ்நிலையில், பல்வேறு கோரிக்கைகள் குறித்து தமிழக முதல்வர் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். இதிலிருந்து டாக்டர் கலைஞர் முந்தைய ஆட்சியின் போது அரசுப் பணியாளர்கள் வலியுறுத்திய கோரிக்கைகள் குறித்து, தான் ஆட்சியில் இல்லாதபோதுகூட அக்கறையுடன் கவனித்து வந்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

அரசுப் பணியாளர்களுடைய கோரிக்கைகளில் தனிப்பட்ட முறையில் ஆழ்ந்த அக்கறை செலுத்தியுள்ள டாக்டர் கலைஞருக்கு நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேற்கண்டவாறு அறிக்கையில் அவர்கள் கூறி உள்ளனர்.

சத்துணவு ஊழியர் சங்கம்

தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் எம். பழனிநாதன், பொதுச் செயலாளர் பி. ராமமூர்த்தி ஆகியோர் கூட்டாக ஒரு அறிக்கை வெளியிட்டு உள்ளனர்.

அந்த அறிக்கையில் "தமிழ்நாடு அரசு 'பட்ஜெட்'டில் அரசு ஊழியர்களுக்கு பல சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளது என்பது நல்ல அம்சமே. ஆனால் அதே சமயம் சத்துணவு ஊழியர்களுக்கு ஏதும் அறிவிக்காதது தொடர்ந்து ஏமாற்றத்தையே அளித்துள்ளது. எனவே முதல்-அமைச்சர் உடனடியாக அனைத்து சத்துணவு ஊழியர்களின் கோரிக்கைகளை இக் கூட்டத் தொடரிலேயே அறிவித்து சத்துணவு ஊழியர்களின் உணர்வுகளையும், எதிர் பார்ப்பையும் நிறைவு செய்திட வேண்டும் என்று சங்கம் சார்பில் வலியுறுத்துகின்றோம்" என்று குறிப்பிட்டு உள்ளனர்.

தலைமை செயலக சங்கம்

தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கத்தின் தலைவர் கே. முருகேசன், செயலாளர் ஆர். பத்மநாபன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டு உள்ள ஒரு அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

தமிழக அரசு பட்ஜெட்டில் அரசு ஊழியர்களுக்கும், சமுதாயத்தின் அடித்தள மக்களுக்கும் பல்வேறு நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு உள்ளன.

இவை தவிர பல பெரிய நிறுவனங்களுடன் ஏற்படுத்தப் பட்டுள்ள தொழில் கூட்டு, திருப்பூர் முன்னேற்றத் திட்டம், வர்த்தக அமைப்புகள் தொழிலதிபர்கள் ஆகியோரைக் கொண்ட தொழில் வளர்ச்சி உயர்மட்டக் குழு ஆகியவை தமிழகத்தின் தொழில் வளர்ச்சியை பெரிதும் மேம்படுத்தும்.

திறமையான நிர்வாகம்

விவசாய வளர்ச்சிக்கும், கல்வி, தொழில், சமூக வளர்ச்சிகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கின்ற நேரத்தில், அரசு வருவாயைப் பெருக்குவதற்கான வரிவிதிப்புகளில் எளிமையைப் புகுத்தியிருப்பது நல்ல திறமையான நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்தும் என நம்புகிறோம்.

இவ்வாறு எல்லாத் தரப்பினரும் மகிழ்ச்சி பெறும் வகையில், சீரிய முறையில் பொருளாதார நுணுக்கத்துடன் நன்கு ஆய்ந்து தயாரிக்கப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த நிதிநிலை அறிக்கையை தலைமைச் செயலக சங்கம் உளமாரப் பாராட்டுகிறது.

மேற்கண்டவாறு அறிக்கையில் முருகேசனும், பத்மநாபனும் கூறி உள்ளனர்.

அனைத்து இந்திய ஆசிரியர் பேரவை

தமிழக அரசு 'பட்ஜெட்'டில் அறிவிக்கப்பட்டுள்ள பல்வேறு நலத் திட்டங்களுக்கு பாராட்டு தெரிவித்து அனைத்து இந்திய ஆசிரியர் பேரவையின் மாநிலத் தலைவர் இருதயராசன், பொதுச் செயலாளர் குகானந்தம் ஆகியோர் அறிக்கை விடுத்து உள்ளனர்.

தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் பொதுச் செயலாளர் சு.மீனாட்சி சுந்தரம் வெளியிட்டு உள்ள ஒரு அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

தமிழக அரசின் 'பட்ஜெட்'டில் ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு அடுக்கடுக்காக எராளமான சலுகைகள் அறிவிக்கப்பட்டு உள்ளன. தி.மு.க. தன் தேர்தல் அறிவிப்பில் கூறியவாறு அரசு, கல்விக்கு முன்னுரிமை தந்திருப்பதையும், கல்வித் துறையில் மகத்தான முன்னேற்றத்திற்கான சீரிய பாதையை வகுத்திருப்பதையும் மெய்ப்பிக்கிறது.

மேலும், நிதி நிலை அறிக்கையில், தமிழ் வளரவும், அனைத்து நிலைகளிலும் தமிழ் பயிற்று மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் தக்க அறிவிப்புகள் பலவற்றை தந்திருப்பதைக் கண்டு தமிழன்னையே, அதன் முதல் மகன் டாக்டர் கலைஞரை உச்சிமோந்து, முத்தமழைப் பொழிவாள் என்பதில் அய்யமில்லை.

மொத்தத்தில் தமிழ் கூறும் நல்லுலகமே வரவேற்கும் கலைஞரின் நிதிநிலை அறிக்கை அனைத்துத் துறையினரையும், குறிப்பாக ஆசிரியர் - அரசு ஊழியர்களை பொறுப்பேற்று 2 மாதங்களிலேயே தி.மு.க. அரசால் இவ்வளவையும் செய்ய எவ்வாறு முடிகிறது என மலைக்க வைக்கிறது, மகிழ்ச்சியடைய செய்கிறது என்பதை தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்டவாறு அறிக்கையில் மீனாட்சி சுந்தரம் கூறி உள்ளார்.

அரசு அலுவலர் கழகம்

தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் (சி மற்றும் டி பிரிவு) மாநிலத் தலைவர் மோகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் "அரசு அலுவலர்களின் எதிர் பார்ப்புகளுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் சலுகைகள் அறிவிப்பதில் இருந்து, தமிழக முதல்வர் கலைஞர் அரசு அலுவலர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிறார் என்பது திண்ணம். இந்த பட்ஜெட்டை உளமார பாராட்டுவதோடு கலைஞர் அறிவித்துள்ள மக்கள் நலத் திட்டங்களின் வெற்றிக்காக கடுமையாக உழைப்போம் என்று தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் (சி மற்றும் டி பிரிவு) தெரிவித்துக்கொள்கிறது" என்று குறிப்பிட்டு உள்ளார்.